# தலைநகரில் அந்நிய நாட்டவர்கள் நடத்தி வந்த

# 16 கடைகளுக்கு சீல்



கோலாலம்பூர், ஜூலை 23-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்றுக் கூட்டு முறையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அந்நிய நாட்டவர்களை நடத்தி வந்த 16 கடைகளுக்கு சீல் வைத்தது. போலீஸ், குடிநுழைவுத்துறை, மலேசிய நிறுவன ஆணையம், உள்நாட்டு வருமான வரி வாரியம், தேசியப் போதைப்பொருள் துடைத்தொழிப்புப் பிரிவு ஆகியவை கூட்டாக இந்நடவடிக்கையை மேற்கொண்டதாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் அது கூறியது.

அதேவேளையில் நாடாளுமன்ற சமூக உள் விவகார சிறப்புக் குழுவைச் சேர்ந்த 6 மேலவை உறுப்பினர்களும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர்.

மேற்குறிப்பிட்ட அந்த 16 கடைகளும் 1974ஆம் ஆண்டு சாலை, கால்வாய் கட்டடச் சட்டத்தின் 46 (1) (டி), 2016ஆம் ஆண்டு வர்த்தகத் தொழில்துறையின் சிறு குற்றச் சட்டத்தின் பிரிவின் கீழ் சீல் வைக்கப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.

அதேவேளையில் குடிநுழைவுத்துறை 14 வங்காளதேசிகளையும் ஒரு மியன்மார் ஆடவரையும் கைது செய்த வேளையில் போதைப்பொருள் துடைத்தொழிப்புப் பிரிவு 9 பேரைக் கைது செய்ததாகவும் அந்த அறிக்கை கூறியது. உள்நாட்டு வருமான வரி வாரியத்தின் அதிகாரிகள் 21 கடைகளில் சோதனை நடத்தினர். அதேவேளையில் மலேசிய நிறுவன ஆணையம் பல்வேறு குற்றங்களுக்காக 13 சம்மன்களைச் சார்வு செய்ததாகவும் அந்த அறிக்கை கூறியது. இச்சோதனை நடவடிக்கையில் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் செராஸ், தாமான் மிகர்ஜாவில் உள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றக் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.